அப்போதுங்கூட விதிமுறைகள் மீறப்படுவது ஏராளமாக இருக்கும் என்ற சந்தேகத்தின் காரணமாகத்தான் எப்படி இதை அணுகுவது என்பது ஆராயப்படுகிறது.

### குமாரபாளையம் அரசு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பெண்களுக்கு அனுமதி.

* 3390 திரு. ஜி. ஜி. குருமூர்த்தி :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேலம் மாவட்டம், குமாரபாளையம் அரசு ஆசிரியர் பயிற்சி கல்லூரியில், பெண்களையும் அனுமதிக்க அரசு உத்தரவிடுமா ?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** தலைவர் அவர்களே,

குமாரபாளையம் ஆசிரியர் கல்லூரியில் பி.எட். வகுப்பில் மகளிர் சேர்க்கப்படுவதில்லை.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் :** சபாநாயகர் அவர்களே, ஒரு விளக்கம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுப்பினர் திரு. சீனிவாசன் கேள்விக்கு, கோர்ட்டிலேயிருந்து ஆணை யிட்ட பிறகு, அவர்களை நாங்கள் அனுமதிக்கிறோம், சர்ட்டிபிகேட் கொடுக்கும்போது . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. தீட்சிதர் அவர்கள் ஒன்றைக் கவனிக்க வேண்டும். உங்களைப் போன்ற முன்வரிசையிலே இருப்பவர்கள், வினாவிற்குத் தொடர்பானவற்றைக் கேட்டால்தான் மற்றவர்கள் பின்பற்றுவார்கள். மூன்று வினாக்கள் ஏற்கெனவே 48 மணித்துளிகளை விழுங்கியிருக்கின்றன. இன்னும் 17 வினாக்கள் இருக்கின்றன என்பதைத் தாங்கள் கவனத்தில் கொள்ளவேண்டும். அடுத்து வினா எண் 2186.

### காரைக்குடியைத் தலைநகரமாகக் கொண்டு தனி மாவட்டம்.

* 2186 திரு. ராம நாராயணன் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) காரைக்குடியை தலைநகராகக் கொண்டு தனி மாவட்டம் ஏற்படுத்தும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?